**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.56/2020**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.9** |
| **Name** | **:** | **திரு.சிவக்குமார்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**எதிரி ஆஜர்.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 6.3.2023.**

**முதல் விசாரணை -**

**நான் தற்போது புதுப்பாளையம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்து வருகிறேன். களம்பூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது, 16.6.2019 அன்று களம்பூர் காவல்நிலைய குற்ற எண்.320/2019 பிரிவு 294(பி) 324,302 இதச வழக்கில் இறந்துபோன கண்ணன் என்பவரின் பிரேதத்தை அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனை செய்யவேண்டி பிரேதத்துடன்**

வேண்டுகோள் கடிதத்துடன் பணி மருத்துவரிடம் அடையாளம் காட்டி ஒப்படைத்தேன்.

பிரேதத்தை அடையாளம் காட்ட அன்றைய தினமே 2 மணிக்கு பிரேத பரிசோதனை மேற்கொண்டு, பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தை பிரேதத்தின் உறவினர்களிடம் ஒப்படைத்தேன். பிரேத பரிசோதனையின்போது எடுக்கப்பட்ட உள்ளுறுப்பு மாதிரிகளை வேலூர் தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டு சென்றேன்.

பிரேத பரிசோதனையின்போது பிரேதத்தில் இருந்த ஆடைகளான சட்டை, பனியன், ஜட்டி, லுங்கி ஆகியவற்றை பெற்று தனி அறிக்கை மூலம் கொடுத்தேன். நீதிமன்றத்தில் உள்ள பனியன் மற்றும் அரைக்கால் சட்டை தான் வாங்கியது. அது சான்று பொருள் 5 மற்றும் 6 ஆகும். இதுசம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

ஆய்வாளர் என்னை விசாரித்தபோது பிரேதத்தில் இருந்த சட்டை, பனியன், ஜட்டி, லுங்கி ஆகியவற்றை தனி அறிக்கை மூலம் ஒப்படைத்ததாக சொன்னேனா என்றால் சொன்னேன். நான்கு ஆடைகள் சொல்லப்பட்ட நிலையில் நீதிமன்றத்தில் அரைக்கால் சட்டையும், பனியன் மட்டும் தான் உள்ளது என்றால் சரி தான்.

நான் தான் ஆஜர் செய்த பனியன், அரைக்கால் சட்டை என்று குறிப்பிட்டு சொல்வதற்கு அடையாளம் ஏதும் இல்லை என்றால் ரத்த கறை உள்ளது. நான் கொடுத்ததாக சொல்லப்படும் ஆடைகளுக்கும், நீதிமன்றத்தில் உள்ள ஆடைகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**வழக்கிற்கு சம்பந்தப்படாத இரு பொருட்களை நீதிமன்றத்தில் சான்று பொருளாக அடையாளம் காட்டிவிட்டு நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.